# மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

## தென் மாகாணம்

## தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரி ஆசிரியர்களை இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – I (அ) தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2023

தென் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் வெற்றிடங்களுக்காக தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – I (அ) தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் தகைமைகள் கொண்டுள்ள தென் மாகாணத்தில் நிரந்தர வதிவிடம் கொண்ட பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களுக்காக பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் இந்த ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் நிலவும் நிதி ஏற்பாடுகள் மற்றும் பணித்தேவைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். ஆட்சேர்ப்புதொடர்பாக முன்வரும் காலங்களில் பெறப்படும் அனுமதிகளுக்கு ஏற்ப 2023.12.31 ஆம் திகதி வரை நிலவும் வெற்றிடங்களுக்காக இப் பரீட்சை செல்லுபடியாகும். இப் போட்டிப் பரீட்சையின் புள்ளிகள் மற்றும் பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் மொத்தத்தின் அடிப்படையில் கூடிய புள்ளிகளை பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளின் தகுதி தரவரிசையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

2. **சம்பள அளவு :**

2022.01.05 ஆந் திகதிய இலக்கம் 03/2016(iv) கொண்ட அரச பொது நிருவாக சுற்றறிக்கைற்கு அமைய இப்பதவிக்கு ரூபா. 31,490 – 6x445 – 7x525 – 2x600 - ரூபா.39,035/- (ஜீ.இ.-1-2016) மாதாந்த சம்பளம் உரித்தாகும். நீங்கள் இந்த சம்பள அளவில் கட்டம் 14 இல் ரூபா 37,835/- சம்பள மட்டத்தில் அமர்த்தப்படுவீர்கள்.

3. **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :**

3.1 கல்வித் தகைமைகள் :

i. ஆசிரியர் நியமனங்களுக்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட விசேடமான பாடத்துறைகளுக்குரிய பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனத்தின் மூலம் அல்லது பெற்றுக் கொண்ட பின்வரும் உப அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுடன் தொடர்பான பட்டத்தை

பெற்றிருத்தல் வேண்டும். அப்பட்டம் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் செல்லுபடியாகும் பட்டமாக இருத்தல் வேண்டும்.

மற்றும்

ii. க.பொ.த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் தாய்மொழி மற்றும் கணிதம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் மூன்று பாடங்களில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு தடவையில் குறைந்தபட்சம் ஐந்து (05) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

மற்றும்

iii. க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரு தடவையில் மூன்று (03) பாடங்கள் உள்ளடங்களாக சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**மிக முக்கியம்** : (விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது கவனத்திற் கொள்ள வேண்டும்.)

- தனது பட்டத்தின் படி விண்ணப்பிக்க முடியுமான பாடங்கள் தொடர்பில் விண்ணப்பதாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.
- பட்டத்திற்காக பயின்றுள்ள பிரதான பாடம்/ பாடங்களுக்கு ஏற்ப மாத்திரம் குறித்த ஆசிரியர் வெற்றிடத்திற்காக விண்ணப்பிக்கலாம்.
- மூன்று (03) பாடங்களுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
- விண்ணப்பிக்கப்பட்ட பாடம் மற்றும் மொழி மூலம் பின்னர் எக்காரணத்திற்கும் மாற்ற இடமளிக்கப்பட மாட்டாது.
- 1988.08.18 ஆம் திகதிய 27/88 ஆம் இலக்க “அங்கவீனர்களுக்கு தொழில் வழங்கல்” எனும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.2 உடல் மற்றும் உளத் தகுதி –

சகல விண்ணப்பதாரியும் ஆசிரியர் ஒருவராக கடமையாற்ற தகுந்த உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

3.3 வயது

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாதும் இருக்க வேண்டும்.

3.4 ஏனைய தகைமைகள் –

I. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பதாரி நற்சான்றிதழ் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பதாரி அல்லது வாழ்க்கைத்துணை , விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முந்திய 03 வருடங்களுக்கு குறையாத காலம் தென் மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட வதிவுச் சான்றிதழ் (டீ.எஸ். 04) மூலம் நேர்முகப் பரீட்சையின் போது வதிவை உறுதிப்படுத்த வேண்டும்)

IV. பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவதுடன் விண்ணப்பதாரிகள் தனது விருப்பத்திற்கு ஏற்ப 05 பிரதேச செயலகப் பிரிவுகளை பெயரிட முடியும் ( முதலாம் தெரிவாக, தனது நிரந்தர வதிவிடம் கொண்டுள்ள பிரதேச செயலகப் பிரிவு இருத்தல் வேண்டும்)

V. ஏதேனும் ஒரு பாடம் தொடர்பில் குறித்த பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தர வதிவுடைய பட்டதாரிகள் குறித்த வெற்றிடங்களை நிரப்ப போதுமானதாக இல்லாத போது மாத்திரம் ஏனைய செயலகப் பிரிவுகளின் விண்ணப்பதாரிகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படும்.

VI. தென் மாகாணத்தில் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்ற முடியுமாக இருத்தல் வேண்டும்.

4. **சேவை நிபந்தனைகள் :**

I. அரச / மாகாண சபை அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது விதிகளுக்கும், தென் மாகாண சபை அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பின் நிபந்தனைகளுக்கும், அதற்கு செய்துள்ள மற்றும் எதிர்வரும் காலங்களில் செய்யப்படும் திருத்தங்களுக்கு அமைவாக தெரிவு செய்யப்படும் பட்டதாரிகள் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு – I (அ) தரத்திற்கு நியமிக்கப்படுவார்கள்.

II. இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் பெற உரிமையுண்டு. இப் பதவிக்கு உரித்தான ஓய்வூதிய முறை தொடர்பில் அரசினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நியமனம் பெறுவோர் உடன்படுதல் வேண்டும்.

III. நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

IV. தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் பதவி உயர்வு வழங்கப்படும்.

V. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க அரச பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கு மேற்கொள்ளும் திருத்தங்கள் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ளவாறு இரண்டாம் அரச கரும மொழி தொடர்பில் தேர்ச்சியை பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு :**

5.1 ஆட்சேர்ப்பு முறை :

2008.07.01 ஆம் திகதி முதல் அமுலாக்கப்பட்ட தென் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.4 இன் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

தெரிவு செய்வதற்காக எழுத்து மூலப் பரீட்சை ஒன்று நடைபெறும்.

நேர்முகப்பரீட்சைக்காக எழுத்து மூல பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமை தொடருக்கமைய குறித்த பாடத்திற்கு மாகாணத்தில் நிலவும் வெற்றிட எண்ணிக்கையை போன்று மூன்று (03) மடங்கு அழைக்கப்படுவர். சாதாரண நேர்முகப்பரீட்சையில் தகுதி பெறுவோர் பின்னர் பிரயோகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

எழுத்து மூல பரீட்சையிலும் பிரயோகப் பரீட்சையிலும் பெற்ற மொத்தப் புள்ளிகளுக்கமைய திறமைத் தொடருக்கிணங்க கூடிய புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரிகள் நிலவும் வெற்றிடங்களுக்காக தெரிவு செய்யப்படுவர். (ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பின் 7.2.4.3.1 இன் படி அமுலாகும்)

இப் பரீட்சை அறிவித்தலின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்பு 2023.06.30 ஆம் திகதிக்கு நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மாத்திரம் உரித்தானதாகும்.

5.2 எழுத்து மூலப் பரீட்சை – இது இரண்டு வினாப்பத்திரங்களைக் கொண்டது.

| பாடங்கள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான குறைந்த பட்ச புள்ளி அளவு |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் 01 மணித்தியாலம்) | 100 | 40 |
| பொது அறிவு (நேரம் 01 மணித்தியாலம்) | 100` | 40 |

**பாடத்திட்டம் :**

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை

பரீட்சார்த்தியிடம் ஆசிரியர் தொழிலுக்காக காணப்படும் திறமைகள் தர்க்க ரீதியிலான அறிவு தொடர்பில் மதிப்பீடு செய்யும் நோக்குடன் இவ் வினாத்தாள் தயாரிக்கப்படும். இது பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்க கூடிய

வினாக்கள் 50 ஐக் கொண்டதாகும் . சகல வினாக்களுக்கும் சுருக்காக விடையளிக்க வேண்டும்.

பாட இலக்கம் 02 - பொது அறிவு

தாம் விண்ணப்பிக்கும் ஆசிரியர் துறைக்குரிய அத்துறை தொடர்பாக காணப்படும் பொது அறிவு/ அல்லது உள்ளீடு ரீதியில் ஏற்பட்டுள்ள மற்றும் ஏற்படக் கூடிய கல்வி முன்னேற்றங்கள் தொடர்பான பொது அறிவு மற்றும் கல்வி நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான பொது அறிவினை பரிசீலனை செய்யக்கூடிய பல்தேர்வு மற்றும் சுருக்கமாக விடையளிக்கக் கூடிய வினாத்தாள்களாகும். இச் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

5.3 பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள் :

I. இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்படும்.
II. சகல பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டியது ஒரு மொழி மூலம் மாத்திரமாகும். இம் மொழி மூலம் தாம் நியமனம் பெறவுள்ள மொழி மூலமாக இருக்க வேண்டும்.
III. பரீட்சார்த்தி தமது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தை மாற்றியமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.
IV. சகல பரீட்சார்த்திகளும் 02 வினாத்தாள்களுக்கும் தோற்ற வேண்டும்.
V. சேர்த்துக் கொள்ளப்படும் எண்ணிக்கை நியமனப் பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படும்.

5.4 சாதாரண நேர்முகப் பரீட்சை –

சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் தொடர்புடையதாக பிரசுரிக்கப்படும் வர்த்தமாணி அறிவித்தலில் அல்லது பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்டுள்ளாரா என்பதை பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதிகளை பரீட்சித்தல்.

5.5 பிரயோகப் பரீட்சை –

பிரயோகப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்பட்ட தலைப்பின் கீழ் சமர்பிப்புக்களை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

| தொடர் இல. | பிரயோகப் பரீட்சையில் புள்ளி வழங்கப்படும் நியதிகள் | உயர்ந்த பட்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கு தேவையான புள்ளி அளவு |
|---|---|---|---|
| 01 | நோக்கமும் பிரவேசமும் | 05 | 02 |

| | | | |
|---|---|---|---|
| 02 | ஆளுமை மற்றும் குரல் வளம் | 05 | 02 |
| 03 | தொடர்பாடலில் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | சமர்பிப்புத் திறமைகள் | 05 | 02 |
| | **மொத்தப் புள்ளிகள்** | 25 | 10 |

5.6 பிரயோகப் பரீட்சை முறைகள் –

I. பிரயோகப் பரீட்சைக்காக 05 நிமிடங்களுக்கு குறையாத காலம் வழங்கப்படும்.

II. பிரயோக பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய உயர்ந்த பட்ச புள்ளிகளின் அளவு 25 ஆகும்.

III. பிரயோக பரீட்சையில் சித்தியடைவதற்கு அவ்வந்த நியதிகளுக்காக குறைந்த பட்சம் 02 புள்ளிகள் வீதம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

IV. பிரயோக பரீட்சை மதிப்பீடுகள் தென் மாகாண கல்வி அமைச்சினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை குழுவினால் மேற்கொள்ளப்படும்.

5.7 நியதிகளின் நோக்கம் –

I. நோக்கமும் பிரவேசமும்
வெற்றிகரமாக பாடத்தின் நோக்கத்தை தெளிவுபடுத்தல் மற்றும் பாட பிரவேச இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

II. ஆளுமை மற்றும் குரல் வளம்
ஆசிரியராக சிறந்த ஆளுமை கொண்ட மற்றும் கற்பிப்பதற்கு சிறந்த குரல் வளப்பிரயோகத்தினை மதிப்பீடு செய்தல்

III. தொடர்பாடலில் தெளிவு
கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உரிய விடயங்களை பயன்மிக்கதாக தெரிவிக்கக்கூடிய இயலுமையினை மதிப்பீடு செய்தல்.

IV. நேர முகாமைத்துவம்
பெற்றுக் கொள்ளப்படும் கால எல்லைக்குள் நோக்கத்தை எட்டக்கூடிய திறமைகளை மதிப்பீடு செய்தல்.

V. சமர்பிப்புத் திறமைகள்
நோக்கத்தை எட்டுவதற்கான சமர்பிப்புக்கள் கலைசார் முறைகளை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான இயலுமைகளை மதிப்பீடு செய்தல்.

6. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணமாக ரூபா.1200.00 ஐ நிகழ் நிலை முறையில் செலுத்துதல் வேண்டும். (VISA மற்றும் MASSTER கார்டுகள் மட்டுமே)

நிகழ் நிலை அல்லாத எந்த முறையிலும் செலுத்தப்படும் கட்டணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது என்பதோடு, வேறு பரீட்சைக்காக மாற்றம் செய்வதற்கும் முடியாது.

7. விண்ணப்பிக்கும் முறை –

I. சகல விண்ணப்பதாரிகளும் www.psc.sp.gov.lk எனும் எமது இணையதளத்திற்கு பிரவேசித்து குறித்த தகவல்களை பூரணப்படுத்தி செலுத்தியதன் (Submit) பின்னர் விண்ணப்பத்தினை தரவிறக்கம் (Download) செய்ய முடியும். விண்ணப்பத்தினை பூரணப்படுத்தும் போது செலுத்தப்பட்டுள்ள உப அட்டவணை 01,02 என்பவற்றை பயன்படுத்த வேண்டும்.

II. நிகழ் நிலையில் விண்ணப்பித்து தரவிறக்கம் செய்யாத விண்ணப்பங்கள் மற்றும் கணினி மூலம் தயாரித்து அச்சு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சகலதும் அறிவித்தலின்றி மறுக்கப்படும்.

III. பூரணமற்ற தகவல்கள் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள், அடிப்படை தகைமைகள் பூர்த்தியாகாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி மறுக்கப்படும். பூரணப்படுத்தி தரவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியொன்று விண்ணப்பதாரி வைத்திருப்பது கட்டாயம் என்பதோடு அதனை நேர்முகப் பரீட்சையின் போது சமர்பித்தல் வேண்டும்.

IV. விண்ணப்பிக்கும் பாடம், பாடங்களுக்கான விருப்பத் தெரிவு வரிசை மற்றும் பிரதேச செயலகங்களின் வரிசை என்பன எக்காரணத்தினாலும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது என்பதுடன் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே சமர்பிக்கலாம்.

V. விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்துதல் (இது சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு முன்வைப்பதற்காக மாத்திரம் தேவைப்படும்)
விண்ணப்பம் மற்றும் பரீட்சை அனுமதிப்பத்திரம் என்பவற்றில் பரீட்சார்த்தியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் ஒப்பத்தினை அரச கல்லூரி ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பகிரங்க நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் கெஸட் செய்யப்பட்ட பதவி ஒன்றினை வகிக்கும் அதிகாரி, ரூபா

498,960/- அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளம் பெறும் அரச, மாகாண அரசாங்க சேவை அல்லது பதவி நிலையில் நிரந்தர உத்தியோகம் வகிக்கும் அதிகாரி, பௌத்த விகாரை ஒன்றின் தலைமை மதகுரு, மதகுருக்களில் குறிப்பிடத்தக்க தரத்தில் அங்கம் வகிக்கும் ஒருவர் ஆகியவர்களில் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

தற்போது அரசாங்க சேவையில் உள்ள ஒருவரின் ஒப்பத்தினை குறித்த திணைக்களத்தின் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் விண்ணப்பப் படிவத்தை நேர்முகப் பரீட்சையின் போது சமர்பிக்க வேண்டும்.

VI. நிகழ் நிலை (Online) மூலம் விண்ணப்பங்கள் செலுத்தக் கூடிய கால எல்லை 2023.10.24 நள்ளிரவில் முடிவடையும்.

8. மேல் குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின் இப்பரீட்சைக்காக எந்த விதத்திலும் விண்ணப்பிக்க முடியாது.
9. இப் பரீட்சையை பிற்போடுதல், இரத்துச் செய்தல் அல்லது நடாத்திய பின் தெரிவு செய்தல்/ செய்யாதிருத்தல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய இறுதித் தீர்மாணம் மற்றும் இவ்வறிவித்தலில் உட்படாத ஏதாவது மற்ற விடயங்கள் இருப்பின் அது தொடர்பாக தீர்மானம் எடுக்கும் உரிமையும் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குரியதாகும்.

10. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி தனியார் முறையில் அறிவிக்கப்படுவதில்லை. பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை அனுதிப்பத்திரங்கள் நவம்பர் மாதம் 03ஆம் திகதி தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உத்தியோக இணையத்தளமான **www.psc.sp.gov.lk** ஊடாக நிகழ் நிலையில் **(online)** வெளியிடப்படும். பரீட்சார்த்திகளால் அவ் இணையத்தளத்தில் உள்ள பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியீட்டு சாளரத்திற்குச் சென்று தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளிடுவதன் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தை தரவிறக்கம் செய்துகொள்ள முடியும். அவ் அனுமதிப் பத்திரத்தை **A4** அளவிலான தாளில் இரு பக்கத்தையும் பயன் படுத்தி அச்சிட்டு ,கையொப்பத்தை உறுதிபடுத்தி பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்பிக்க வேண்டும். அனுமதிப்பத்தரம் இல்லாத எந்த ஒரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சைக்கு முகம் கொடுக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. மேலும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் முகம் கொடுக்கும் அனைத்து வினாப்பத்திரத்திற்கும் பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையும்வாறு தன்னுடைய அடையாளத்தை உறுதிபடுத்த வேண்டும்.அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை மண்டப பொறுப்பதிகாரியிடம் சமர்பிக்க வேண்டும்.

   1. ஆட்கள் பதிவு செய்யும் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை
   2. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு
   3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்

11. பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்திருப்பார்கள் என்ற முடிவின் அடிப்படையில் விண்ணப்ப முடிவுத் திகதி அல்லது அதற்கு முன்னர் பரீட்சை கட்டணம் செலுத்தி விண்ணப்பத்தினை நிகழ் நிலை மூலம் செலுத்திய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் தகைமை கொண்டிருப்பர் என்ற கருதுகோளின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்ற இடமளிக்கப்படும். இப் பரீட்சை 2023 நவம்பர் மாதம் 18ஆம் திகதி சனிக்கிழமை காலி,அம்பலாங்கொடை,மாத்தறை,அகுரெஸ்ஸ,தங்கல்ல மற்றும் ஹம்பாந்தோட்டை எனும் பரீட்சை நகரங்களில் நடாத்தப்படும். பரீட்சைக்கு தோற்ற அனுமதிப்பது என்பது தகைமை கொண்டதற்கான ஏற்புடைமையாக கருத முடியாது. விண்ணப்பதாரி தகைமை கொண்டிராதவர் என அறியவரும் எந்த சந்தர்ப்பத்திலும் பரீட்சார்த்தித் தகைமையை இரத்துச் செய்யவும் மற்றும் நியமனம் வழங்குவதை நிராகரிக்கவும் அதிகாரம் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உண்டு.

12. பொய்யான தகவல்களை முன்வைத்தல்
இப் பரீட்சைக்கு முகம்கொடுப்பதற்காக எந்த பரீட்சார்த்தியாவது தகுதியற்றவர் என அறியவந்தால் பரீட்சைக்கு முன் அல்லது பரீர்சை நடக்கும் போதில் அல்லது பின் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி நிலையை இரத்துச் செய்ய வாய்ப்பு உண்டு.மேலும், பதவி பெற்ற பின் ஏதேனும் ஒரு பரீட்சார்த்தியால் சமர்பிக்கப்பட்ட ஏதேனும் ஒரு விபரம், பொய்யென அறிந்தும் சமர்பித்துள்ளார் என்பதை தெரிய வந்தால் அவர் சேவையில் இருந்து நீக்கப்பட வாய்ப்பு உண்டு.

13. பரீட்சை நடாத்துவது தொடர்பாக தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்படுத்தப்படும் சட்டத்திட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உள்ளாகுவர்.அச் சட்டத்திட்டங்கள் மீறப்பட்டால் தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏற்படுத்தப்படும் தண்டனைக்கு உள்ளாக அவருக்கு நேரும்.

14. இவ் அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிப் பிரயோகத்தில் ஏதேனும் ஒரு பொருத்தப்பாடின்மை ஏற்படின் சிங்கள மொழிப் பிரயோகம் ஏற்புடையதாகும்.

15. நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனத் திகதியில் இருந்து 14 நாட்களுக்குள் பதவி ஏற்க வேண்டும். அவ்வாறு பதவி ஏற்க தவரும் பட்சத்தில் மறு அறிவித்தலின்றி நியனம் இரத்தாகும்.

உப அட்டவணை 01

வெற்றிடங்கள் காணப்படும் பாடங்கள் மற்றும் மொழி மூலம் இங்கு காட்டப்பட்டுள்ளது. அதற்கேற்ப விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழி தெரிவு செய்யப்பட வேண்டும்.

| தொடர் இல. | பாடம் | மொழி மூலம் | | | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|---|---|
| | | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | |
| 01 | ஆரம்பக் கல்வி | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் சிங்களம்/ தமிழ் மொழி அல்லது சிங்களம் / தமிழ் மொழியியல் பாடத்தினை பிரதான பாடமாக கற்றுள்ள கலைமாணிப் பட்டம் |
| 02 | ஆங்கிலம் | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் ஆங்கில மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் ஒன்று அல்லது கலைமாணி (ஆங்கிலம்) விசேட பட்டம் TESL (Teaching English as a Second Language) அல்லது HND ஆங்கிலத்துடன் ஏதேனும் பட்டம் |
| 03 | நடனம் (சிங்களம் / உள்நாட்டு) | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக நடனம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (நடனம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |
| 04 | நடனம் (பரதம்) | X | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக பரத நாட்டியம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (நடனம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |
| 05 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக கீழைத்தேய சங்கீதம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (கீழைத்தேய சங்கீதம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |
| 06 | சங்கீதம் (மேலைத்தேய) | √ | X | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக மேலைத்தேய சங்கீதம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (மேலைத்தேய சங்கீதம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 07 | சங்கீதம் (கர்நாடக) | X | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக கர்நாடக சங்கீதம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (கர்நாடக சங்கீதம்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் இளமாணி (விஷேட) பட்டம் |
| 08 | நாடகமும் அரங்கியலும் | √ | X | X | நாடகமும் அரங்கியலும் பிரதான பாடமாக உள்ள பொது அல்லது விஷேட பட்டம் |
| 09 | சித்திரம் | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக சித்திரம் உள்ளடங்களாக உள்ள நுண்கலைமாணிப் பட்டம்/ அழகியற் கற்கை பட்டம் அல்லது கலை இளமாணி விஷேட (சித்திரம்) பட்டம் |
| 10 | விஞ்ஞானம் | √ | √ | X | உயிரியல் / இரசாயனவியல்/ பௌதீகவியல் பிரதான பாடமாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணிப் பொது அல்லது விஷேட பட்டம் |
| 11 | கணிதம் | √ | √ | X | தூய கணிதம் / பிரயோக கணிதம் / இணைந்த கணிதம் பிரதான பாடமாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணிப் பொது அல்லது விஷேட பட்டம் |
| 12 | புவியியல் | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக புவியியல் உள்ளடங்களாக உள்ள கலை இளமாணி பட்டம் |
| 13 | குடியியற் கல்வி | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பிரதான பாடமாக சமூக நிர்வாகம் மற்றும் குடியியற் கல்வி கற்றுள்ள கலை இளமாணி பட்டம் அல்லது மானுடவியல் (விஷேட) பட்டம் |
| 14 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | √ | √ | X | வணிகமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய விஞ்ஞான இளமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய முகாமைத்துவ இளமாணி பட்டம் / வணிக கற்கை துறைக்கு உரிய எந்த ஒரு பட்டம் |
| 15 | கொரியன் | √ | X | X | கொரியன் மொழியை பிரதான பாடாக பெற்றுள்ள பொது அல்லது விஷேட பட்டம் |
| 16 | ஜப்பான் | √ | X | X | ஜப்பான் மொழியை பிரதான பாடாக பெற்றுள்ள பொது அல்லது விஷேட பட்டம் |
| 17 | இரண்டாம் மொழி (தமிழ்) | √ | X | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் பட்டத்திற்காக தமிழ் மொழியை பிரதான பாடமாக சித்தி பெற்று இருத்தல் மற்றும் பின்வரும் ஒரு தகைமையினை பூர்த்தி செய்திருத்தல்.<br>க.பொ.த.(சா/த) பரீட்சையில் பிரதான பாடமாக சிங்களத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றினால் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | அல்லது அரசின் சட்ட ரீதியாக நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றில் 06 மாத காலத்திற்கு குறையாத சிங்கள மொழி பற்றிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். |
| 18 | மனைப் பொருளியல் | √ | X | X | பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அல்லது உயர் கல்வி அமைச்சினால் ஏற்றுக்கொள்ளப்படும் பல்கலைக்கழகமொன்றின் மனையியல் கற்கைக்கான பட்டதாரியாக இருத்தல். |
| 19 | சிங்கள மொழியும் இலக்கியமு ம் | √ | X | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் சிங்கள மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலை இளமாணிப் பட்டம் |
| 20 | தமிழ் மொழியும் இலக்கியமு ம் | X | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் தமிழ் மொழியினை பிரதான பாடமாக கற்றுள்ள கலை இளமாணிப் பட்டம் |
| 21 | வரலாறு | √ | √ | X | மொத்த கற்றல் காலப்பிரிவில் வரலாறு / தொல்லில் பிரதான பாடமாக கற்றுள்ள கலை இளமாணிப் பட்டம் |
| 22 | சுகாதாரமும் உடற்கல்வியு ம் | √ | √ | X | விளையாட்டு விஞ்ஞான மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான இளமாணி அல்லது விஞ்ஞான இளமாணி (உடற் கல்வி) விஷேட பட்டம் அல்லது உடற் கல்வி மற்றும் விளையாட்டு பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் |
| 23 | கணக்கீடு | √ | X | X | கணக்கீடு தொடர்பான விஷேட பட்டம் அல்லது கணக்கீட்டினை பிரதான பாடமாகக் கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 24 | வணிகக் கல்வி | √ | X | X | வணிகக் கல்வி அல்லது வணிக முகாமைத்துவத்திற்கு தொடர்பான பாடம் ஒன்றை பிரதான பாடமாக் கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 25 | பொருளியல் | √ | X | X | பொருளியல் தொடர்பான விஷேட பட்டம் அல்லது பொருளியலை பிரதான பாடமாக கொண்ட ஏதாவது ஒரு பட்டத்தினை பெற்றிருத்தல். |
| 26 | இரசாயனவிய ல் | √ | X | √ | நான்கு வருட கால விஷேட பட்டம் ஒன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமாக பட்டத்தின் மொத்த கற்கை பாடங்களில் 1/3 இனை க.பொ.த. (உ/த) பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்றிருத்தல் அல்லது மூன்று வருட பட்டம் ஒன்றின் போது மொத்த கற்கை பாடங்களில் 1/3 இனை குறைந்த பட்சம் குறித்த பாடத்தினூடாக பூர்த்தி செய்திருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27 | பௌதீகவிய ல் | √ | X | X | நான்கு வருட கால விஷேட பட்டம் ஒன்றில் பிரதான பாடமாக அல்லது ஏனைய பாடமாக பட்டத்தின் மொத்த கற்கை பாடங்களில் 1/3 இனை க.பொ.த. (உ/த) பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்றிருத்தல் அல்லது மூன்று வருட பட்டம் ஒன்றின் போது மொத்த கற்கை பாடங்களில் 1/3 இனை குறைந்த பட்சம் குறித்த பாடத்தினூடாக பூர்த்தி செய்திருத்தல். |
| 28 | உயிரியல் | √ | X | X | நான்கு வருட கால விஷேட பட்டம் ஒன்றில் பிரதான பாடமாக தாவரவியல் / தாவர உயிர் விஞ்ஞானம் அல்லது விலங்கியல் கற்றிருத்தல் மற்றும் பிரதான பாடமாக தாவரவியல் / தாவர உயிர் விஞ்ஞானம் ஆகும் போது ஏனைய பாடமாக வலங்கியலும் பிரதான பாடமாக விலங்கியல் ஆகும் போது ஏனைய பாடமாக தாவரவியல் / தாவர உயிர் விஞ்ஞானமும் குறைந்த பட்சம் இரண்டு வருடங்களிலேனும் உயர் தர பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்றிருத்தல் அல்லது மூன்று வருட பொது பட்டம் ஒன்றில் தாவரவியல் / தாவர உயிர் விஞ்ஞானம் மற்றும் விலங்கியல் எனும் இரண்டு பாடங்களினதும் கூட்டாக, மொத்த கற்கை பாடங்களில் 1/3 இனை க.பொ.த. (உ/த) பாடத்திட்டத்திற்கு அமைவாக கற்றிருத்தல். |
| 29 | விவசாய விஞ்ஞானம் | √ | X | X | விஞ்ஞான இளமாணி விவசாய தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ பட்டம். (B.Sc. Agricultural Technology and Management) |
| 30 | இணைந்த கணிதம் | √ | X | X | தூய கணிதம், பிரயோக கணிதம் பாடம் ஒன்றாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணி பட்டம். (BSc graduate with Applied, Pure Mathematics as subject) |
| 31 | பொறியியற் தொழில் நுட்பவியல் | √ | X | X | பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்ப இளமாணிப் பட்டம் |
| 32 | உயிர் முறைமைக ள் தொழில் நுட்பவியல் | √ | X | X | விவசாய விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது உயிர் முறைமைகள் தொழில்நுட்பம் தொடர்பான தொழில்நுட்ப இளமாணி பட்டம். |
| 33 | தொழில் நுட்பவியலு க்கான விஞ்ஞானம் | √ | X | X | பௌதீகவியல் பாடத்திற்காக காட்டப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் இந்தப் பாடத்திற்கு உரித்தாகுவதுடன், பிரதான பாடமாக பௌதீகவியல் பாடம் கட்டாயமாகும். மேலதிக இரசாயனவியல், |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | உயிரியல் கற்றிருத்தல் கருத்திற் கொள்ளப்படும். |
| 34 | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியல் | √ | √ | X | தகவல் தொழில்நுட்ப பட்டம் அல்லது தகவல் தொழில்நுட்பம் பிரதான பாடமாக கற்றுள்ள பட்டம் ஒன்று. |
| 35 | சுகாதாரம் மற்றும் சமூக நலன்பேணல் | √ | X | X | சுகாதார மேம்பாட்டு விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது சுகாதார மற்றும் சமூகப் பாதுகாப்பு பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்று. |
| 36 | உடற்கல்வி மற்றும் விளையாட்டு | √ | X | X | விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது விஞ்ஞான இளமாணி (உடற்கல்வி) விஷேட பட்டம் அல்லது உடற் கல்வி மற்று விளையாட்டு பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 37 | அரங்காற்றுகை கலைகள் | √ | X | X | அரங்கேற்றக் கலைகள் தொடர்பான விஷேட பட்டம் அல்லது கலை இளமாணி – விஷேட (அரங்கேற்றக் கலைகள் / நுண்கலைகள் / நடனம் / சங்கீதம்) பட்டம் அல்லது கல்விமாணி (நாடகமும் அரங்கியலும்) பட்டம் அல்லது அரங்கேற்றக் கலைகள் அல்லது நுண்கலைகள் பிரதான பாடமாக கொண்ட விஷேட பட்டம் ஒன்று. |
| 38 | நிகழ்ச்சி முகாமை | √ | X | X | விருந்தோம்பல், சுற்றுலா வணிகம் மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான முகாமைத்துவ பட்டம் அல்லது நிகழ்ச்சி முகாமைத்துவம் பிரதான பாடமாக உள்ளடங்கிய பட்டம் ஒன்று. |
| 39 | கலையும் கைப்பணியும் | √ | X | X | கட்புலக் கலை விஷேட பட்டம் (சித்திரம் , சிற்பம் , அச்சுக் கலை , புடவை மற்றும் புடவை சார்ந்த கலைகள் என்பன) அல்லது கற்புலக் கலை திட்டமிடல் விஷேட பட்டம் (சித்திரக் கலை மற்றும் கிரபிக்) அல்லது கற்புல மற்றும் தொழில்நுட்பக் கலைகள் விஷேட பட்டம் அல்லது கலை இளமாணி அல்லது நுண்கலை இளமாணி அல்லது விஷேட பட்டம் – (சித்திரக் கலை / கிரபிக் / சிற்பம் / கட்புல மற்றும் தொழில்நுட்ப கலை ஆகிய பாடங்கள் அல்லது பாடம் ஒன்று பிரதான பாடமாக கற்றிருத்தல் வேண்டும்) |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 | உள்ளக வடிவமைப்பு | √ | X | X | கட்டிடக் கலை தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது நிர்மாண இளமாணி பட்டம் அல்லது கட்டிடக் கலைக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பெற்ற பட்டம் அல்லது உள்ளக வடிவமைப்பு பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 41 | நவநாகரீக வடிவமைப்பு | √ | √ | X | நிர்மாண இளமாணி பட்டம் அல்லது கட்புல கலை விஷேட பட்டம் (புடவை மற்றும் ஆடைத் தொழில் கலை) அல்லது நவநாகரீக நிர்மாணிப்பு மற்றும் உற்பத்தி மேம்பாடு தொடர்பாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டம் அல்லது நவநாகரீக நிர்மாணிப்பு பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 42 | கிரபிக் வடிவமைப்பு | √ | X | X | நிர்மாண இளமாணி பட்டம் அல்லது கட்புல கலை மற்றும் திட்டமிடல் தொடர்பன கலை இளமாணி பட்டம் (சித்திரம் மற்றும் கிரபிக்) அல்லது கணினி பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது கணினி பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்ட,ம் அல்லது கணினி விஞ்ஞானம் பாடம் உள்ளடங்கிய பட்டம் அல்லது (மேற் குறிப்பிட்ட பட்ட கற்கையின் 1/3 பங்கு கொண்ட கிரபிக் வடிவமைப்பு உள்ளடங்கிய பாடப்பரப்புக்கள் கற்று சித்திபெற்றிருத்தல் வேண்டும்) கிரபிக் வடிவமைப்பு பிரதான பாடம் ஒன்றாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 43 | நிலத்தோற்ற வடிவமைப்பு | √ | X | X | விவசாயம் தொடர்பான விஷேட பட்டம் (தோட்டக்கலை சிறப்புத் தேர்ச்சியுடன்) அல்லது தோட்டக்கலை, பூ வளர்ப்பு மற்றும் நிலத்தோற்ற வடிவமைப்பு தொடர்பான இளமாணி பட்டம் |
| 44 | கால்நடை உற்பத்தி தொழில் நுட்பக் கற்கைகள் | X | √ | X | விவசாயம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் (விலங்கு விஞ்ஞானம் சிறப்புத் தேர்ச்சியுடன்) அல்லது விலங்கு விஞ்ஞானம் மற்றும் மீன்பிடித்தல் விஞ்ஞானம் தொடர்பான இளமாணி பட்டம் அல்லது விலங்கு விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது கால்நடை வளர்ப்பு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | தொழில்நுட்பம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்று |
| 45 | உணவு உற்பத்தி தொழில் நுட்பக் கற்கைகள் | √ | X | X | உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் இளமாணி பட்டம் அல்லது உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் விஷேட பட்டம் அல்லது உணவு விஞ்ஞானமும் போஷாக்கும் தொடர்பான இளமாணி பட்டம் அல்லது விஞ்ஞான இளமாணி பட்டத்துடன் உணவு விஞ்ஞான தொழில்நுட்ப விஞ்ஞான முதுமாணி பட்டம் அல்லது விவசாய விஞ்ஞான இளமாணி உணவு விஞ்ஞான தொழில் நுட்ப விஷேட பட்டம் ( மொத்த பாடத்திட்டத்தில் 60% இற்கு குறையாத உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாட உள்ளடக்கம் இருத்தல் வேண்டும்) விவசாய விஞ்ஞான இளமாணி உணவு விஞ்ஞான தொழில் நுட்ப விஷேட பட்டம் ( மொத்த பாடத்திட்டத்தில் 60% இற்கு குறையாத உணவு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய பாட உள்ளடக்கம் இருத்தல் வேண்டும்) விவசாயம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் சிறப்புத் தேர்ச்சியுடன்) அல்லது உணவு உற்பத்தி தொழில்நுட்பம் அல்லது உணவு தயாரிப்பு தொழில்நுட்வியல் பட்டம் ஒன்று. |
| 46 | நீரியல் வள தொழில் நுட்ப கற்கைகள் | √ | X | X | விவசாயம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் (நீருயிர் விஞ்ஞானம் தொடர்பான சிறப்புத் தேர்ச்சியுடன்) அல்லது நீர்வாழ் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கால்நடை விஞ்ஞானம் விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் அல்லது விலங்கு விஞ்ஞானமும் மீன்பிடித்தலும் தொடர்பான விஞ்ஞன இளமாணி பட்டம் அல்லது நீர்வாழ் வளங்கள் முகாமைத்துவம் பாடத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் அல்லது நீர்வாழ் வளங்கள் தொழில்நுட்பம் பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்று. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 47 | நிர்மாண தொழில் நுட்ப கற்கை | √ | √ | X | சிவில் பொறியியல் தொடர்பான பொறியியல் விஞ்ஞான பட்டம் அல்லது கட்டுமானம் மற்றும் கட்டிட சேவைகள் தொழில்நுட்பவியல் உள்ளடங்கிய பொறியியல் தொழில்நுட்ப இளமாணி அல்லது தொழில்நுட்ப இளமாணி பட்டம் அல்லது கட்டுமான தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாகக் கொண்ட பட்டம் ஒன்று. |
| 48 | மோட்டாரியல் தொழில் நுட்ப கற்கைகள் | √ | X | X | தொழில்நுட்ப இளமாணி (மோட்டார் இயந்திரவியல்) அல்லது விஞ்ஞான பொறியியல் ( மோட்டார் இயந்திரவியல்) பட்டம் அல்லது மோட்டாரியல் தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 49 | மின் மற்றும் இலத்திரனியல் தொழில் நுட்ப கற்கைகள் | √ | √ | X | மின் மற்றும் இலத்திரனியல் பொறியியல் தொடர்பான விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது பொறியியல் தொழில்நுட்ப விஞ்ஞான இளமாணி பட்டம் அல்லது பிரயோக இலத்திரனியல் விஞ்ஞானம் தொடர்பான விஞ்ஞான இளமாணி விஷேட பட்டம் அல்லது மின் மற்றும் இலத்திரனியல் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 50 | புடவை மற்றும் ஆடைத் தொழில் நுட்ப கற்கைகள் | √ | X | X | வடிவமைப்பு இளமாணி பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம் தொடர்பான பொறியியல் பட்டம் அல்லது தொழில்நுட்ப இளமாணி பட்டம் அல்லது புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 51 | உலோக நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் | √ | X | X | தொழில்நுட்ப இளமாணி பட்டம் இயந்திர (பொது) அல்லது இயந்திர தொழில்நுட்பம் (பொது) பிரதான பாடமாக கற்ற பட்டம் அல்லது உலோக நிர்மாண தொழில்நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று |
| 52 | அலுமினிய நிர்மாண தொழில் நுட்ப கற்கைகள் | √ | X | X | தொழில் நுட்ப இளமாணி பட்டம் (சிவில் / கட்டுமான / இயந்திர) அல்லது அலுமினிய நிர்மாண தொழில் நுட்பத்தினை பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று. |
| 53 | கணினி வன்பொருள் மற்றும் வலைபிண்ணல் | √ | √ | X | மூன்று வருட காலத்துடன் கொண்ட தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் / கணினி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் ( அந்தப் பட்டத்திற்காக பின்வரும் கற்கை துறைகளுடன் தொடர்பாக மொத்த கற்கை துறையின் 1/5 பகுதியினை கொண்ட பாடப்பகுதிகளை கற்று |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | சித்தியடைந்திருத்தல்.) அல்லது நான்கு வருட காலத்துடன் கொண்ட தகவல் தொழில்நுட்பம், கணினி விஞ்ஞானம் / கணினி பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் ( அந்தப் பட்டத்திற்காக பின்வரும் கற்கை துறைகளுடன் தொடர்பாக மொத்த கற்கை துறையின் 15% பகுதியினை கொண்ட பாடப்பகுதிகளை கற்று சித்தியடைந்திருத்தல்.) அல்லது கணினி விஞ்ஞானத்தினை பிரதான பாடமாக கற்றுள்ள விஞ்ஞான இளமாணி / தொழில் நுட்ப இளமாணி பட்டத்துடன் தகவல் தொழில் நுட்பம் / கணினி தொழில்நுட்பம் / கணினி வன் பொருள் / கணினி வலைபின்னல் தொடர்பான முதுகலை பட்டம் (குறித்த முதுகலை பட்டத்திற்காக மொத்த பாடப்பரப்பில் பகுதியினை கொண்டதாக பின்வரும் பாடப்பிரிவுகள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)<br>பாடப்பிரிவுகள் -<br>i) Computer Hardware<br>ii) Computer system<br>iii) Computer Networks<br>iv) Computer Architecture<br>v) Operating System<br>vi) Electronics<br>vii) Arduino Technology<br>viii) IT Security Engineering<br>ix) Network Security<br>x) Information Security<br>xi) Cyber Security<br>xii) Computer Hardware and Network related |
| 54 | உற்பத்தி | √ | X | X | மூன்று வருட காலத்துடன் கொண்ட இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான பட்டம் ஒன்று. |
| 55 | சுற்றுலா மற்றும் விருந்தோம் பல் | √ | √ | X | விருந்தோம்பல் மற்றும் ஓய்வு முகாமைத்துவம் தொடர்பான நிர்வாக இளமாணி பட்டம் அல்லது சுற்றுலா முகாமைத்துவ விஷேட பட்டம் அல்லது புரவலன் சேவைகள் முகாமைத்துவ விஷேட பட்டம் அல்லது விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவ பட்டம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | அல்லது சுற்றுலா முகாமைத்துவ பட்டம் அல்லது சுற்றுலா மற்றும் கலாசார வளங்கள் முகாமைத்துவ பட்டம் அல்லது வழிசெலுத்துதல் மற்றும் விருந்தோம்பல் பிரதான பாடமாக கொண்ட பட்டம் ஒன்று |
| 56 | விஷேட கற்கைகள் | √ | X | X | விஷேட கற்கைகள் தொடர்பான பட்டம் அல்லது ஊடாடும் கற்கைகள் தொடர்பான பட்டம் அல்லது பேச்சி மற்றும் செவிப்புலம் தொடர்பான பட்டம் ஒன்று. |

உப அட்டவணை 02

விண்ணப்பதாரிகள் தெரிவு செய்ய வேண்டிய பிரதேச செயலகப் பிரிவுகள்

| **தொடர் இலக்கம்** | **பிரதேச செயலகப் பிரிவு** |
|---|---|
| 101 | அக்மீமன |
| 102 | அம்பலாங்கொடை |
| 103 | பத்தேகம |
| 104 | பலப்பிட்டி |
| 105 | பெந்தோட்டை |
| 106 | போப்பே பொத்தல |
| 107 | எல்பிட்டி |
| 108 | காலி |
| 109 | கோனாபீனுவல |
| 110 | ஹபராதுவ |
| 111 | ஹிக்கடுவ |
| 112 | இமதுவை |
| 113 | கரந்தெனிய |
| 114 | நாகொடை |
| 115 | நெலுவை |
| 116 | நியாகமை |
| 117 | தவலமை |
| 118 | வெலிவிட்டிய திவிதுரை |
| 119 | யக்கலமுல்லை |
| 120 | வந்துரம்பை |
| 121 | ரஜ்கமை |
| 122 | மாதம்பாகமை |
| 123 | அக்குரசை |
| 124 | அத்துரலிய |

| | |
|---|---|
| 125 | தெவிநுவரை |
| 126 | திக்வெலை |
| 127 | ஹக்மனை |
| 128 | கம்புறுபிட்டிய |
| 129 | கிரிந்தை புகுவெல்லை |
| 130 | கொட்டப்பொலை |
| 131 | மாலிம்படை |
| 132 | மாத்தறை |
| 133 | முலட்டியானை |
| 134 | பஸ்கொடை |
| 135 | பிட்டபெத்தறை |
| 136 | திஹகொடை |
| 137 | வெலிகமை |
| 138 | வெலிபிட்டிய |
| 139 | அம்பலாந்தோட்டை |
| 140 | அங்குனகொலபெலஸ்சை |
| 141 | பெலியத்தை |
| 142 | அம்பாந்தோட்டை |
| 143 | கட்டுவனை |
| 144 | லுனுகம்வெகரை |
| 145 | ஓகெவெல |
| 146 | சூரியவெவை |
| 147 | தங்காலை |
| 148 | திஸ்சமகாராமை |
| 149 | வலஸ்முல்லை |
| 150 | வீரகெட்டிய |